## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 113/2025

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 1 |
| Name | : திரு. விஜய் |
| Father/Husband's Name | : மகாதேவன் |
| Village | : நெ.74/ஏ, திரௌபதியம்மன் கோயில் தெரு |
| Taluk | : கந்தாடு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 25 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.05.2025.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது கந்தாடு கிராமத்தில் வசித்து பள்ளி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.09.2024 அன்று காலை 08.30 மணியளவில் செங்கல்பட்டு பேருந்து நிலையத்திற்கு எதிரேயுள்ள அக்ஷயா பவன் ஓட்டல் பின்புறம் எனது இருசக்கர வாகனம் ஸ்பிளண்டர் பிளஸ் TN 12 A 6865 என்ற வாகனத்தை நிறுத்திவிட்டு சென்னைக்கு சென்றேன். மறுநாள் 08.09.2024 அன்று காலை 10.00 மணிக்கு அந்த இடத்திற்கு சென்று பார்த்த போது எனது வண்டியை காணவில்லை. வேறு எங்காவது இருக்கிறதா என்றுதேடி பார்க்கும் போது ஒரு நபர் வேறு சாவியை போட்டு வேறு ஒருவர் வண்டியை திருட முயற்சிப்பது எனக்கு தெரிந்தது. அவர் தப்பித்து ஓட முயற்சி செய்தார்.

அங்கிருந்த பொது மக்களை வைத்து அவரை பிடித்து விசாரிக்கும் போது தன்னுடைய பெயர் சேதுபதி, த/பெ. கணேசன், கற்பகம்மாள் தெரு, புளியங்குடி,

தென்காசியை சேர்ந்தவர் என்று கூறுனார். அவரை செங்கல்பட்டு நகர காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று காலை 11.00 மணியளவில் புகார் அளித்தேன். சாட்சியிடம் இவ்வழக்கு புகார் காண்பிக்கப்பட்டது. அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்று கூறுகிறார். புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் காவல் நிலையத்தில் உள்ளவர்கள் எழுதினார்கள். **<u>அந்த புகார் அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>**

ஆஜர் எதிரி தான் நான் பிடித்து காவல் நிலையத்தில் ஆஜர் செய்த நபர். இவ்வழக்கு சொத்தான சாவி சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் சாவியை வைத்து தான் ஆஜர் எதிரி வேறு ஒரு பைக்கை திருட முயற்சி செய்தார். நானும், பொது மக்களும் சேர்ந்து எதிரியை போலிசாரிடம் ஒப்படைத்தோம். காணாமல் போன எனது பைக் கிடைக்கவில்லை. போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

அதசாஆ 1 புகாரை நான் எழுதவில்லையென்றால் சரிதான். அதில் என்ன விவரம் எழுதியுள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் எங்கு பணிபுரிகிறேன் என்றால் செங்கல்பட்டு விவேகானந்தா வித்யாலயா பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறேன். நான் சென்னைக்கு எதற்காக சம்பவத்தன்று சென்றேன் என்று கேட்டால் எனது அப்பாவின் வியாபாரத்திற்காக பொருள் வாங்கி வரசொன்னதால் சென்றேன். நான் வாடிக்கையாக செல்வேனா என்றால் இல்லை மாதத்திற்கு ஒரு முறை செல்வேன். எனது வண்டியை திருடியதாக எதிரியை பிடித்து கொடுக்கவில்லையென்றால் சரிதான். நான் வாகனம் நிறுத்திய இடம் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடம் என்றால் சரிதான்.

எதிரி சாவியை போட்டு திருட முயற்சி செய்த விவரத்தை போலிசார் என்னிடம் சொன்னார்களா என்றால் இல்லை. அவர் திருடு முயற்சி செய்த வண்டி யாருடையது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது வண்டியை போலிசார் கண்டுபிடித்து கொடுத்தார்களா என்றால் இல்லை. போலிசார் என்னை எங்கு விசாரணை செய்தார்கள் என்றால் டவுன் ஸ்டேசனில். எத்தனை முறை போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் ஒரு முறை. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்று சொன்னால் சரிதான். என்னுடைய வண்டியை எடுத்தது அவரில்லை வேறு வண்டியை திருட முயற்சித்தது அவர் தான்.

**போலிசார் கேட்டு கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.**

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

# **JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

## **CC No. 113/2025**

## **DEPOSITION OF WITNESS**
### **(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 2 |
| Name | : திரு. கந்தன் |
| Father/Husband's Name | : கணேசன் |
| Village | : நேரு நகர், திருப்போரூர் கூட்ரோடு |
| Taluk | : வல்லம், செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 66 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.05.2025.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது வல்லம் கிராமத்தில் வசித்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். கடந்த 08.09.2024 அன்று காலை 11.00 மணியளவில் செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையத்திற்கு எதிரேயுள்ள அக்ஷயா ஓட்டலுக்கு பின்புறம் ஆஜர் எதிரியை பார்த்தேன். நானும், கோவிந்தசாமி என்பவரும் அவரை பொது மக்கள் கும்பலாக அழைத்து வரும் போது பார்த்தோம். அதற்கு பிறகு அவரை செங்கல்பட்டு நகர காவல் நிலையத்தில் பார்த்தேன். போலிசார் எதிரியை கைது செய்ததற்கு சாட்சியாக கையெழுத்து போட சொன்னதால் நானும், கோவிந்தசாமியும் கையெத்து செய்தோம். சாட்சியிடம் ஒப்புதல் வாக்குமூலம் காண்பிக்கப்பட்டது. அதில் உள்ள 1வது கையொப்பம் தன்னுடையது என்று கூறுகிறார். **அந்த 1வது கையொப்பம் அதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பிறகு காவல் நிலையத்திலிருந்து நான் கிளம்பிவிட்டேன்.

**இந்த சாட்சியை பகுதியாக பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரியிடமிருந்து சாவியை போலிசார் பெறும் போது நான் அங்கிருந்தேனா என்றால் இருந்தேன். எதிரியிடமிருந்து பெறப்பட்ட சாவி தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது தானா என்றால் ஆம். எதிரி போலிசாரிடம் தான் திருட முயற்சி செய்த விவரத்தை கூறும் போது நான் காவல் நிலையத்தில் இருந்தேன் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் ஆம்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒன்று. அதில் என்ன விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். போலிசார் எதிரியை விசாரிக்கும் போது வீடியோ எடுத்தார்கள் என்றால் நான் வெளியில் இருந்ததால் பார்க்கவில்லை. போலிசாரிடம் எதிரி வாக்குமூலம் அளித்த விவரம் தெரியாது என்றால் சரியல்ல அவர் சொன்னார். போலிசார் என்னிடம் வெளியில் தான் கையொப்பம் பெற்றார்களா என்றால் ஆம். போலிசார் கேட்டு கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அவ்வாறு சம்பவம் எதுவும் நடக்கவில்லையென்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.